

அன்னபூர்ணாவின்
திருட்டு ராமன்

# திருட்டு ராமன்

(தமிழ்)

## நடிகர்கள்

| | |
|---|---|
| A. நாகேஸ்வரராவ் | ராமன் |
| ரேலங்கி வெங்கட்ராமய்யா | வைரமாணிக்கம் பிள்ளை |
| K. ஜக்கய்யா | டாக்டர் |
| ராமண்ணா பந்துலு | பப்ளிக் பிராஸிக்யூட்டர் |
| R. நாகேஸ்வரராவ் | பாபுல் |
| கௌரிபதி சாஸ்திரி | திருப்பதி |
| வெங்கார வெங்கடசுப்பையா | வாத்தியார் |
| A. ராமலிங்கம் | சீதாராமன் |
| M. கிருஷ்ணமூர்த்தி | சர்க்கிள் இன்ஸ்பெக்டர் |
| B. கிருஷ்ண ராவ் | சீனன் |
| வர்மா | ராமன் (ஜூனியர்) |
| K. சுப்பா ராவ் | நாராயணன் |

## நடிகைகள்

| | |
|---|---|
| K. சாவித்திரி | சீதா |
| N. ஜமுனா | லக்ஷ்மி |
| சூர்யகாந்தம் | கனகா |
| பத்மாவதி தேவி | டாக்டர் தாயார் |
| ஹேமலதா | சுப்பம்மா |
| ஹேமலதா ராவ் | ஜமுனாபாய் |
| ஸ்வராஜ்யலக்ஷ்மி | பாபா |
| காமேஸ்வரம்மா | ரங்கம்மா |
| விஜயலக்ஷ்மி | லக்ஷ்மி (ஜூனியர்) |

முதலியோர்

## பின்னணிப் பாடல்கள்

பி. சுசீலா    ஜிக்கி    கண்டசாலா

நடனங்கள் — குசலகுமாரி, மாலதி, வனமாலா

# திருட்டு ராமன்

## கதைச் சுருக்கம்

பால்ய வயதிலேயே தந்தையை பறிகொடுத்த அப்பாவிக் குடும்பத்தைச் சேர்ந்தவனே ராமன்....ஆனால் குடும்ப நிலையை, தன் தாயார் தன்னையும், தன் தங்கையையும் படிக்க வைக்கப் படும் கஷ்டத்தை உணராது....திரிந்து வந்தான்....புத்திசாலி தைர்யமும், துணிச்சலுங்கொண்ட துடுக்குக்காரப் பிள்ளை.... ராமனுக்கு தன் தங்கை லக்ஷ்மிமேல் அளவு கடந்த அன்பு....

அபாய நிலையிலிருக்கும் தாய்க்கு மருந்து வாங்க பண மில்லாததால், பலரை கெஞ்சுகிறான். கடைசியில் கீழேவிழுந்த பர்ஸ் ஒன்றை எடுத்து, அதனால் இளம் குற்றவாளிகள் பள்ளிக் கூடத்திற்கு அனுப்பப் படுகிறான். அந்த சோகத்திலேயே அவன் தாயார் கண்ணை மூடுகிறாள்....அனாதையான லக்ஷ்மி மேல் அனுதாபம் கொண்டு, அந்த ஊர் வாத்தியார், அனாதை ஆஸ்ரமத்தில் கொண்டு போய் சேர்க்கிறார்,

வாலிபனாக வளர்ந்து விடுதலையாகி வெளியே வருகிறான் ராமன்...தாயார் இறந்ததைக் கேட்டு கதறுகிறான். தங்கை யைத் தேடி அலைந்து, கிடைக்காது, வாடி வரும்சமயம் பாபுல் எனும் ரௌடி நகைக்காக குழந்தையைக் கொல்வதைக் கண்டு, ஓடி, குழந்தையைக் காப்பாற்றுகிறான்...அதன் மூலம் அந்தக் குழந்தையின் தகப்பனாரான ராவ்பஹதூர் வைர மாணிக்கம் பிள்ளையிடம் வேலைக்காரனாக அமர்கிறான். அதே ரௌடி பாபுல் காய் கறிகள் விற்கும் சீதா என்னும் பெண்ணை மடக்கி ஹிம்சிக்கும்போது ராமன் பாபுலோடு சண்டை போட்டு அவனை விரட்டி சீதாவின் மனதில் இடம் பெறுகிறான்....

பிறகு தற்செயலாக சந்தித்த வாத்யார் மூலம் தன்தங்கை லக்ஷ்மி இருக்கும் இடம் அறிந்து, சூட்டு, பூட்டு, கோட்டு இரவல் வாங்கி, பெரிய பணக்காரன் போல் நடித்து, லக்ஷ்மியை சந்தித்து கண்டபடி பெருமை அடித்துக் கொள்கிறான். லக்ஷ்மி யும் பெருமகிழ்ச்சியுடன் மேல் படிப்புக்காக 300 ரூபாய் கேட்க, தருவதாக கௌரவமாக வாக்களிக்கிறான். ஆனால் ரூபாய்க்கு என்ன செய்வான்....நாளும் நெருங்கி விட்டது.

பணம் அனுப்பாது போனல் தங்கைக்கு ஆபத்து நேரிடும் என்று, தான் வேலை செய்யும் மாணிக்கம் பிள்ளை வீட்டிலேயே பணமும், புடவையும் திருடி தங்கையிடம் கொடுத்துவிடுகிருன். ஆஸ்ரம வருஷாந்திரக் கொண்டாட்டத்திற்கு வந்த மாணிக்கம் பிள்ளை விஷயம் அறிந்து, போலீசுக்கு தெரிவிக்க, ராமன் சிறைக்கு அனுப்பப் படுகிருன். லக்ஷ்மி அவமானம் தாங்கா மல் ஆஸ்ரமத்திலிருந்து, நள்ளிரவில் வெளியேறுகிருள்.

தனியாக துக்கத்தோடு வந்த லக்ஷ்மி ரௌடி பாபு லிடம் சிக்கிக் கொள்கிருள். ஆனல் சீதா....அவனிடமிருந்து காப்பாற்றி, டாக்டர் மோகன் ராவுக்கு அறிமுகம் செய்கிருள். மோகன் ராவுக்கும், லக்ஷ்மிக்கும் காதல் உதயமாக, மோகன் ராவ் லக்ஷ்மியை மணக்க முடிவு செய்கிருர்.

இதன் நடுவே, ராமன் சிறையிலிருந்து, விடுதலையாகிருன் தன் தங்கை இருப்பது தெரியாது, மோகன்ராவ் வீட்டிலேயே டிரைவராக அமர்கிருன். ஆனல் தன்தங்கை அங்கு இருப்பதை தெரிந்து, அவளுக்கும் மோகன்ராவுக்கும் திருமணம் நடக்கப் போவதையும் தெரிந்து சந்தோஷப் படுகிருன்; அதே சமயம், திருடனின் தங்கை என்று வெளியானல், கல்யாணம் நின்று விடுமோ என்று பயந்து, தன்னை அண்ணன் என்று யாரிடமும் வெளியிடக் கூடாதென்று, லக்ஷ்மியிடம் சத்தியம் வாங்கு கிருன். இருந்தாலும் தன் கலியாணத்தின் போது, அண்ணன் கூட இருக்க வேண்டும் என்று ராமனை கெஞ்சுகிருள் லக்ஷ்மி.... இதன் நடுவே மாணிக்கம் பிள்ளை, தன் மகளை மோகன்ராவ் மணக்கவில்லையே என்ற ஆத்திரத்தில், எல்லாம் அம்பலப் படுத்தி மணத்தை நிறுத்துவதாக மிரட்டுகிருன்.

**லஷ்மியின் திருமணம் என்ன ஆகிறது?**

**அண்ணன் தன் எதிரே இருக்க வேண்டும் என் கிற அவள் ஆசை பூர்த்தியாகிறதா?**

**மாணிக்கம் பிள்ளையின் மிரட்டலின் முடிவு என்ன?**

**அண்ணன் தங்கை உறவு வெளியாகக்கூடாது... என்று சத்தியத்தால் நேர்ந்த விபரீதம் என்ன?**

**இவைகளுக்கு வெள்ளித்திரை பதிலளிக்கும்.**

# திருட்டு ராமன்

## பாட்டுகள்

(1)

எழுதியது:
**கவிஞர் கண்ணதாசன்**

பாடியது:
**சுசீலா**

தெரிஞ்சுக்கோ பாபூ....இப்பவே
தெரிஞ்சுக்கோ பாபூ....நீயும்
தெரிஞ்சுக்கோ பாபூ.

நல்ல வுாழ்வே தினமும் காணுவாய்
விண் வஞ்சக மில்லா வாழ்வையே

சில்லரைப் பயல்களைக் கூடுவாயா?
கிள்ளிச் சண்டை போடுவாயா?
ஓ உயர் வாழ்வினை நீயே நாடணும்
நல்ல தூயவரோடு சேரணும்
பார் மீதிலே....வாழ் நாளிலே
நேர்மையை நீயே.

கல்விக்கு கோளா சூட்டுவயா
குருவுக்கு நாமம் போடுவயா
புதுப் பாடம் மறந்தே போவயா?
பொல்லாதவரோடே சேர்வயா
பார் மீதிலே....வாழ் நாளிலே நேர்மையே நீயே

விடிந்ததும் நீயே தாயின் பதங்களில்
தினமும் பணிவாயே ஆகா
தினமும் பணிவாயே

மனதினில் தங்கையின் வாழ்வையும் நீயே
மறந்திடலாகாதே....ஆகா
மறந்திடலாகாதே

ஒ....அறிவும் பொருளும் கண் போலவே
பகுத்தறிவை நீயும் மறவாதே
மனம் போலவே மகிழ்வாகவே
பேரும் காண்பாயே.

---

எழுதியது: (2) பாடியது:

**கவிஞர் கண்ணதாசன்** **ஜிக்கி**

கண்ணில் கண்டாலும் சுகம்தரும் வீரன்
உந்தன் முன்னாலே வருவாரு பாரு
சந்தமாமா....ஒஹோ சந்தமாமா

தூய சொல்லாலே மனங்கவர்வாரே
தீது கொள்ளாத வளர்பிறை நீயே
வாழ்வில் தேன்சிந்தும் தூயன் இந்நாளே
உந்தன் முன்னாலே வருவாரு பாரு
சந்தமாமா....ஒஹோ சந்தமாமா

மாயக்கண்ணாலே விண்ணாளும் ஜாலம்
பாதிக் கண்வாசல் வழியாகக் காண்பேன்

பார்க்க நீயிங்கே நின்றும் போது
உந்தன் முன்னாலே வருவாரு பாரு
சந்தமாமா....ஒஹோ சந்தமாமா

பேசப் போனால் உனக்கவர் ஏது?
பாடிப் பார்த்தாலும் பெறமுடியாது, ஓ
வாழ்வில் தேன்சிந்தும் தூயன் இந்நாளே
உந்தன் முன்னாலே வருவாரு பாரு
சந்தமாமா....ஒஹோ சந்தமாமா
கண்ணில் கண்டாலே (கண்ணில்)

---

## (3)

எழுதியது: **கவிஞர் கண்ணதாசன்**

பாடியது: **கண்டசாலா**
**ஜிக்கி**

**ராமு:** ஓ சிறுசாலையிலோர் குயிலம்மா
நின்று பாடுவதைக் கேளம்மா

**சீதா:** மருமல்லியி லோர் மலரய்யா
பொங்கும் போது நகை வீணய்யா

**ராமு:** பொங்கிடும் புன்னகைத் தேன் சிந்திடவே
பூத்திடும் மல்லிகை மணம் போலே
உன் சிறு செவ்விதழ் இணையேதம்மா

**சீதா:** கவிஞன் நீயோ கவிபாட
கற்றுத் தந்தார் யாரேதான்
கலந்தே பழகிய வகைதானோ
மருமல்லியி லோர் மலரய்யா

**ராமு:** விழியால் கோமள மொழியே கூறிடும்
கனியே மனதினில் உன்னை நினைந்திடும்
கவிதா மொழி பல வருதேதான்

**சீதா:** பொய் மெருகிலே இன்பம் ஏதையா
மனதால் மாத்திரம் சுகமில்லை
குணமே உயர்தரும் தனமய்யா

---

## டேன்ஸ் பாட்டு

## (4)

பாடியது : **சுசீலா**

பால கோபாலா **மா முத்தரா** கிருஷ்ணா....
பரம கல்யாண குணாகரா....
பால கோபாலா - **சின்னி** பாலா கோபாலா....
முத்து பாலா கோபாலா **மா முத்தரா**
கிருஷ்ணா பாலா கோபாலா....
நந்த பாலா கோபாலா மா முத்தரா
கிருஷ்ணா பரம கல்யாண குணாகரா
மந்தஸ்மித ஸுந்த ரானனா,

கோடி மதன ஸுந்தர ஜகன் மோஹன
இந்திரா மந்தீரா பக்த,
ஸுந்தரா ஹ்ருதயீ ராவிந்தா
ப்ருங்க பக்தி மக ரந்தா
விந்தித கோபிகா ப்ருந்தா. (பால)

---

எழுதியது: (5) பாடியது;
**சுரபி** **கண்டசாலா**

ஊர் சிரிக்க பேரெடுத்தாயா?....நீ
உலகை ஏய்க்கும் திருடன் என்றே

கடமையென்று நீ நினைந்தாய்
களவு செய்ய மனந் துணிந்தாய்
கம்பி எண்ணிக் காலமெல்லாம்
வெம்பி வாழக் கதறுகின்றாய்

கண்ணியமே தன்னுயிராய்
எண்ணி வாழும் சோதரியை
பெண்களெல்லாம் கேலியாகப்
பேசிடவே செய்து விட்டாய்
அண்டி நிற்க நிழலில்லாமல்
அலைந்து திரிய வைத்துவிட்டாய் (ஊர்)

உத்தமனாய் உன்னை எண்ணி
உறவு கொண்டு பரிவு கொண்டு
நித்தம் மனதில் கனவு கண்டு

நிமிர்ந்து நடந்த பேதை நெஞ்சில்
நெருப்பைத் தூவலாமோ

கெஞ்சி வேலை கேட்க வந்தால்
கிண்டல் செய்வான் ஒரு கிறுக்கன்
அஞ்சு ரூபாய் நோட்டைக் காட்டி
அழைத்திடுவான் ஒரு துடுக்கன்
பிஞ்சு மனசு நோகக் கையை
பிடித்திழுப்பான் ஒரு வெறியன்
பஞ்சையான பெண்களுக்கு
நஞ்ச மொன்றே கதியா ?
நஞ்ச மொன்றே கதியா ?

---

## (6)

எழுதியது:
**சுரபி**

பாடியது:
**சுசீலா**

பலே சாதுவெங்கள் பாபூஜி
பாலர்கள் தாதா பாபூஜி
புன்னகையாலே வலை வீசி
பூமியை மயக்கும் பாபூஜி

உயர்வும் தாழ்வும் ஒழியென்றாரே
உள்ளம் கலந்தால் பலமென்றாரே
மா நிலமெல்லாம் ஒன்றென்றாரே
மனதில் அன்பைப் பொழிந்தாரே

இளம் காளை போல் எழுந்தாரே
எடுத்தடி முன்னே வைத்தாரே
துவஜம் தாங்கியே புகழ்பாடியே
தேசம் திரண்டு நடந்ததே

கதி கலங்கியதே சாம்ராஜ்யம்
வந்தது பாரத ஸ்வயராஜயம்
சத்யம் அஹிம்சையே சாந்தி மார்க்கமென
ஜகத்தினுக்கோர் நெறி உரைத்திட்டாரே
மா நிலமெல்லாம் போற்றும் சாது
மஹாத்மா என்றே பணிந்தாடு.

---

## (7)

எழுதியது:
**கவிஞர் கண்ணதாசன்**

பாடியது:
**சுசீலா**

எந்தன் காதலும் மலராதா சொல்வாய் ராஜா
இன்ப காலமும் சேராதா
விண் வீதி மேவும் ராஜனே
இந்தப் பேதை நிலைமை பாராயோ

நிழல் தேடி மனமும் ஆடுதே
மண மேவும் கதையை நாடுதே
புது நெஞ்சில் நாதம் வந்த தேன்
இது தானோ ப்ரேமா பந்தமோ

முதல் நாளைப் போலே ஏனோ
விளையாடும் அன்பே தேன்தருமோ
என் மனதில் பண் பாடியே
சுக மிஞ்சுவ தேன்? மகராஜா

---

(8)

எழுதியது:
**சுரபி**

பாடியது:
**ஜிக்கி**

ஏங்காதே சின்னமாமா
நீஏங்காதே சின்னமாமா
நீயே என்னோட பொன்னுமாமா

பொங்கிடுது தென்றல் மாமா
தேனைப் பொழிஞ்சிடுது என்னெஞ்சுமாமா
கொஞ்சிடுது வெண்ணிலாமாமா
அங்கே குந்தி நீயும் மனமுடையலாகுமா?

கண்ணோட களை போன தேனோ
உன்மதியும் மங்கிப் போன தேனோ
விதியென்று துன்பத்தில் தேம்புறே
இன்ப வாழ்வெல்லாம் கனவாகப் போகுதே

நேத்து பழசு முடிஞ்சு போச்சு
நாளை கிடக்கு ஏது பேச்சு
இன்றே இன்பம் தேடிக்கோ
இந்தக் கவலை எல்லாம் எதுக்கோ

---

## (9)

இயற்றியது
**கவிஞர் கண்ணதாசன்**

பாடியது:
**ஜிக்கி**

வாருங்கள்!.... வாருங்களேன்!!.... மாமோ....
பேசிடணும் கொஞ்சம் பேசிடணும்!....

உள்ளே நிழலிருக்கு நிம்மதியா நீ நிக்கலாம்!....
உள்ளே ஷோக்கான குஷனோடை நாற்காலியும்!....
கொஞ்சம் தூங்கிடவே பட்டு மெத்தை பல உள்ளது....
பேசிடணும் கொஞ்சம் பேசிடணும்;.... (வாருங்கள்)

ஆசையுடன் உண்ண நல்லு சோருள்ளது....நீ....
வான் கோழி பிரியாணி கூட்டுள்ளது!....
சுறு மீனில் செய்த புட்டும் நீ உண்ணலாம்!
பேசிடணும் கொஞ்சம் பேசிடணும்....

சுவையான பால்தயிர் மிக உள்ளது!....
அஞ்சுவகை ஊறுகாயும் இங்குள்ளது....
தின்னு ரோகம் வந்தா சரியான மருந்துள்ளது....
    ரோகம் வந்தா சரியான மருந்துள்ளது....
நீயும் சாகணுன்னு பாடை கட்ட கம்புள்ளது!....

பேசிடணும் கொஞ்சம் பேசிடணும்....

| | |
|---|---|
| கதை | D. V. நாசராசு B.A. |
| வசனம் | உதயகுமார் |
| பாடல்கள் | கவிஞர் கண்ணதாசன் |
| | கனக சுரபி |
| சங்கீத டைரக்ஷன் | பெண்ட்யாலா நாகேஸ்வரராவ் |
| ஒளிப்பதிவு | ஆதி இராணி |
| ஒலிப்பதிவு | சேஷாத்திரி |
| ஆர்ட் | S. கிருஷ்ணராவ் |
| எடிடிங் | M. S. மணி |
| ஸ்டுடியோ | வாஹினி |
| டைரக்ஷன் | K. V. ரெட்டி B.Sc. (Hons.) |

---

பூரண உரிமையாளர்கள் :

# நல்லம் பிக்சர்ஸ் சர்க்யூட்

மதராஸ் பெங்களூர்

Columbia

HEAR SONG HITS

FROM THIS FILM

**ON COLUMBIA**

**RECORDS**

இப் படத்தின் பாடல்களை

"கொலம்பியா"

ரிகார்டுகளில் கேளுங்கள்

NEO ART PRESS, MADRAS - 2